[1986 மே 5

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) உடுமலைக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூடுதல் குழாய் பதித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிவடைந்து திட்ட வரைவு ஒன்று ரூ. 425.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும், எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதன் திட்ட மதிப்பீடு நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ரூ. 425.00 இலட்சங்கள் ஆகும். வருட பராமரிப்பு ரூ, 8.03 இலட்சங்கள் ஆகும். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், தமிழ்நாடு அரசிடமிருந்தும் கடனாகப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பெற்றுள்ளது. வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படு மென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதையும் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

650—(* வினா எண் 4451) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

1986 மே 5]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) செங்கோட்டை நகராட்சிக்கு தற்போதுள்ள குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்ய நகராட்சியிடம் ஆய்வுக் கட்டணம் செலுத்துமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரியுள்ளது. இக்கட்டணம் செலுத்தப்பட்டவுடன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு உத்தேச மதிப்பீடு, வாரியத்தால் தயாரிக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் ஒரே கேள்விக்கான பதில் தான் வந்து கொண்டிருக்கிறது. இந்த ஆய்வுக்கட்டண பிரச்சினை பல முறை இந்த அவையில் பேசப்பட்டு, ஆய்வுக்கட்டணத்தை திட்டத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் இதுகுறித்து உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். செங்கோட்டையைப் பொறுத்தவரையில் குண்டாறு நதியின் கெபாசிட்டியை உயர்த்துவதன் காரணமாக இன்றைக்கு அந்த நகருக்கு தண்ணீர் கொண்டு வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆய்வுக் கட்டணம் தொடர்பாக குறிப்பிட்ட கருத்து பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு இல்லை. ஆகவே நகராட்சி ஆய்வுக் கட்டணம் செலுத்திய பிறகுதான் நாம் அதுபற்றிய ஆய்வுப் பணிகளை எடுக்க முடியும். குண்டாறு நதி நீர் ஆதாரங்களைக் கொண்டு ஆய்வுசெய்து பார்த்தபோது, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அதன்மூலமாக குடி தண்ணீர் வழங்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாற்று நீர் ஆதாரத்தை குறித்துதான் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, குண்டாறு நதியில் இருக்கிற தண்ணீர் விவசாயத்திற்கு காணக் கூடியதாகத்தான் இருக்கிறது. அதிலே வெள்ளம் வருகிறபோது 'ஓவர் ப்ளோ வாட்டரை' சேமித்து வைக்கலாம் என்ற ஒரு கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே குண்டாறு நதியின் கெபாசிட்டியை உயர்த்துவதற்கு, அதன்

அணையை 15 அடி உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? அதைப்போல செங்கோட்டைக்கு அருகிலே ஹரிஹரா நதியென்று இருக்கிறது. அதன் படுகையில் 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்' மிக அதிகமாக இருக்கிறது. செங்கோட்டை ரெயில்வே நிலையத்திற்கு அங்கே யிருந்து தண்ணீர் எடுத்து வாகன்களையெல்லாம் கழுவுகிற வேலைகளையெல்லாம் செய்கிறார்கள். அந்த ஹரிஹரா நதியிலிருந்து தண்ணீர் எடுத்து செங்கோட்டை நகருக்கு மட்டுமல்லாமல் தென்காசிக்கு கூட தண்ணீர் வழங்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு அதுகுறித்தும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஆய்வு செய்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

திரு. தெ. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சாம்பவார் வடகரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 29 லட்சம் ரூபாய் ஒதுக்கி அங்கே இருக்கின்ற மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அடிக்கல் நாட்டினார்கள். அந்த வேலை இன்னும் துவங்கப்படாமல் இருக்கிறது. எப்போது துவங்கப்படும், எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது உலக வங்கியின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு இருக்கிற திட்டம். நீர் ஆதாரம் குறித்து சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. அவைகளைச் சீர் செய்ததற்குப் பிறகு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

651—(*வினா எண். 3593) திரு. கே. உச்சி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், அணைகட்டியில் உள்ள ஆதிவாசிகள் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?